[illegible]

V.2. No.1

Jan 1929

SL
RB73 [illegible] M28
N29.2.1.
187121

OFFICE ... 12 FEB 1929

ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் உ | விபவ ஆண்டு மார்கழி—தைத் திங்கள்<br>1929 ஆம் ஜனவரிமீ | இதழ் க |
|---|---|---|

## நமது பத்திரிகை

[ம. பாலசுப்பிரமணிய முதலியார், பத்திராசிரியர்]

நமது பத்திரிகை சென்ற ஆண்டு புத்துயிர் பெற்றெழுந்தது. அறிவுக்கும் அன்புக்கும் நிலைக்களமாக வுள்ளவரும், நம் சமாஜத்துக்குப் பல ஆண்டுகள் தலைவராகயிருந்து பேருதவி புரிந்தவரும், தமிழ் நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சைவ சமய வளர்ச்சிக்கும் உழைக்கும் அறிஞரையும் கழகங்களையும் ஊக்குவித்து அவர்கள் தொண்டுக்கு வரும் இடையூறுகளைக் களைந்து அன்னார் திருப்பணி பெரும்பயன் விளைவிக்குமாறு மனமொழி மெய் கொண்டும் பொருள் கொண்டும் உபகரிப்பவருமாகிய ஞானியார் சுவாமிகள் என வழங்கும் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் சென்ற 1927-ம் ஆண்டில் சென்னைக்கு விஜயம் செய்தபோது எடுத்துக்கொண்ட முயற்சியின் விழுப்பயனே நமது பத்திரிகை மீண்டும் வெளிவருதற்குக் காரணமாக விருந்தது. சுவாமிகள் நம்மைத் தாய் போல் அருள் சுரந்து பரிபாலித்தும் தந்தை போல் நல்லாரிணக்கத்திற் புகுவித்தும் வருகிறார்கள். ஆகவே பலவகையிலும் அவர்களே நமது பத்திரிகைக்கு இரு முதுகுரவர் நிலையில் இருக்கின்றார்கள். இம்மட்டிலா? இல்லை, இல்லை. ஆராய்ச்சிகள் நிறைந்துள்ள இக்காலத்தில் ஏனைய துறைகளில் நந்தமிழ் நாட்டில் காணப்படும் குழப்பமானது நம் சைவ சமயத் துறையிலும் புகுந்து சைவ நன்மக்களைப் பலவாறு பிளவு படுத்திப் பெருங்கேடு விளைவிக்கிறது. சைவசித்தாந்த மரக்கலம் உண்மை யென்னும் பெருங்கடலிற் செல்லுங்காற் காணும் நவீன ஒழுங்கீனமான பல பொய்க்கருத்துக்களாம் கற்பாறைகளில் மோதியிடர்ப்படா வண்ணம் பெரியதொரு கலங்கரை விளக்கம் போற்றிகழ்ந்து பெறுதற்கரிய ஞான குரவராகவும் விளங்குகின்றார்கள்.

இத்தகைய பெரியாரைத் துணையாகக் கொண்ட நமது பத்திரிகை இவ்வாண்டும் செவ்வனே நடைபெறுமென்பதற்கு ஐயமேயில்லை. நமது பத்திரிகைக்குச் சென்ற வாண்டு சைவத் திருவாளர்கள் மணி. திருநாவுக்கரசு முதலியாரும், பாரிப்பாக்கம்-கண்ணப்ப முதலியாரும் முறையே ஆசிரியராகவும் உதவி ஆசிரியராகவுமிருந்து பேருதவி புரிந்தனர். இவ்வாண்டில் சைவசமயச் சீர்திருத்தங்கள் பல செவ்விதின் நடைபெறவேண்டி யிருத்தலானும், தற்கால ஆராய்ச்சிக் குழப்பத்தி லிருந்து தெளிந்து பழைய உண்மைகட்குப் புத்துயிர் தரவேண்டி யிருத்தலானும், சைவசமய அறிவும் உண்மை யாராய்ச்சியறிவும் ஒருங்கே பொருந்திய பதின்மர் கூடி, பத்திராசிரியக் கழகமாக அமைந்து நமது பத்திரிகையை நடத்துவது மேம்பட்டது என்று இச்சமாஜத்து 23-வது ஆண்டு நிறைவிழாவில் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்துக்கேற்ப திருவாளர்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, கி. குப்புச்சாமி முதலியார், P. V. மாணிக்க நாயக்கர், மணி. திருநாவுக்கரசு முதலியார், C. S. ஸ்வாமிநாத முதலியார், பா. கண்ணப்ப முதலியார், S. கண்ணுசாமிப் பிள்ளை, வல்லை - பாலசுப்பிரமணிய முதலியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய பதின்மர் பத்திராசிரியக் கழகத்தினராக தெரிந் தெடுக்கப் பட்டிருக்கின்றனர். அவர்களுட் சிறியேனுகிய என்னைப் பத்திராசிரியப் பொறுப்பாளனுகவும் (Editor-in-charge) திரு. வல்லை-பாலசுப்பிரமணிய முதலியாரை உதவிப் பத்திராசிரிய ராகவும் தெரிந்தெடுத்தனர். இது அன்பர்கள் எங்கள் மீது வைத்துள்ள கருணையைக் குறிக்கிறது. நான் எவ்விதத் தகுதியும் அற்றவனுயினும் இக்கழகத்தின் உறுப்பினர் வேண்டிய துணை செய்வர் என்ற முழு நம்பிக்கை எனக்கிருத்தலான், நமது பத்திரிகை இவ்வாண்டிற் செய்யவிருக்கும் சீர்திருத்தங்களையும் தொண்டுகளையும் செம்மையாகவே முடிக்கும் என உறுதி கூறும் நிலைமையிருப்பது எனக்கு உவகையையும் ஊக்கத்தையும் அளிக்கின்றது.

இது நிற்க, நமது பத்திரிகையின் பொருள் வலிவை நோக்கில் நமது சந்தா நேயர்கள் செய்தற்குரிய உதவி பெரிதாக யிருக்கிறது. சந்தாதாரர்கள் ஆயிரக்கணக்காகச் சேர்ந்தால் எவ்வித பத்திரிகையும் மிக ஒழுங்காக நடைபெறும். பத்திரிகை எழுதுவதும் வெளியிடுவதும் சந்தாதாரர்கள் வாங்கிவாசித்துப் பயன் பெறுவதற்கேயன்றோ? ஆயிரக்கணக்கானவர்கள் வாங்கி வாசித்தால் விழுப்பயன் விளைவதோடு பத்திரிகையின் நோக்கங்களும் நடை முறையும் அவர்கள் மனதிற் பதிந்து நாட்டிலே அந்நோக்கங்கள் முற்றுப் பெறுதற்குரிய பெரிய சக்தியைத் தானே உண்டாக்குமன்றோ? ஆதலால் சைவர்கள் அனைவரும் நமது பத்திரிகையை ஆதரித்துச் சிவபுண்ணியத்தில் ஈடுபட விரும்புகிறோம்.

நமது பத்திரிகையை ஆதரிக்கும் வழிகள் பலவுள. முதலாவதாகச் சந்தாதாரராகச் சேர்தல். ஓராண்டிற்கு ஒன்றரை ரூபாய் முன்பணமாகச் சந்தா செலுத்துவோர் இச்சமாஜத்தில் அங்கத்தவராவதோடு நமது பத்திரிகையையும் இலவசமாகப் பெறுவர். இரண்டாவதாகச் சந்தாதாரர்களை இயன்றவரைச் சேர்த்தல். இது தற்போதுள்ள சந்தாதாரர்கள் நமது பத்திரிகைக்குச் செய்தற்குரிய முதற்கடன். மூன்றாவதாக இருபத்தைந்து ரூபா ஆயுள் சந்தா கொடுத்தும் கொடுக்கச் செய்தும் ஆயுள் அங்கத்தினராகச் சேர்தல், சேர்ப்பித்தல். நான்காவதாகப் பத்திரிகை மாத விதழ் ஒன்றின் அச்சுச் செலவைத் தந்தாவது தரச் செய்தாவது போஷக உறுப்பினர் தொகையைப் பெருக வைத்தல். ஐந்தாவதாக விளம்பரங்களை நமது பத்திரிகையில் பொருள் கொடுத்து அச்சிட்டு உபகரித்தல். இவ்வழிகளிலும் இன்னும் நண்பர்கட்குத் தோன்றும் உயரிய வழிகளிலும் நமது பத்திரிகைக்குப் பெருநிதி திரட்டியுதவுமாறு வேண்டுகிறோம்.

இனி நமது பத்திரிகையில் வெளிவருதற்குரிய கட்டுரைப்பொருள்களைப் பற்றிச் சிறிது கூறுதும். சைவசித்தாந்த உண்மைகளை விளக்கும் கட்டுரைகளே யன்றி உண்மை ஆராய்ச்சி பற்றியவைகளும், சைவ சமய முன்னேற்றத்திற்கு உண்மையில் வழிகாட்டும் கட்டுரைகளும், நமது சமய ஆலய, மடச் சீர்திருத்தங்கட்கு உண்மையில் செய்தற்குரிய பெரும் பணியை விளக்கும் கட்டுரைகளும், மேல்நாட்டு அறிவியல் முடிபுகளோடு நம் சமய உண்மைகளை ஒப்பிட்டு இரண்டற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் புலப்படுத்தும் கட்டுரைகளும் நமது பத்திரிகையில் நன்றி யறிதலுடன் வெளியிடப்படும். தமிழ் நாட்டுப் பேரறிஞர் பலர் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் அதிகமாகவும் அடிக்கடியும் அரிய கட்டுரைகள் வரைந்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் நமக்குத் துணைபுரிந்து நமது நோக்கங்களை இனிது முடித்து நந்தமிழ் நாட்டுக்குப் பெரும் பயனளிக்குமாறு அக்கடவுள் பாதமலர்களை வழுத்துகின்றும்.

“வையாநீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய வன்பர் விளங்குக
சைவநன்னெறி தான்றழைத்தோங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே.”

---

# சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
# இருபத்துமூன்றும் ஆண்டு நிறைவிழா

[ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி]

இவ்விழா விபவ ஆண்டு மார்கழித் திங்கள் ௯, ௧௦, ௧௧-ஆம் நாட்களாகிய (1928ஆ டிசம்பர்மீ 23, 24, 25உ) ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் சென்னை, பச்சையப்பன் கல்லூரி மகா மண்டபத்தில் மாஜி மந்திரி திவான் பகதூர் சைவத் திருவாளர் ஸர். T. N. சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சைவசித்தாந்தப் பேரறிஞர்

18727

18727

பலரும் சைவ நன்மக்களும் சைவப் பற்றுடைய சிலர்களும் குழுமியிருந்த கழகம் அறிவும் அன்பும் மிளிரும் பேரவையாக விளங்கிற்று. மூன்று நாட்களும் வான் வலிந்து வழங்கியும் புயல் பூரித்து எழுந்தும் இடையூறிழைப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது ஆடவரும் மகளிரும் சிறுரும் குழுமியிருந்தது அன்னார் சமயப் பற்றை இனிது விளக்கியது.

முதல்நாள் பிற்பகல் க-மணிக்கு விழா தொடங்கிற்று. தமிழ்மறை யோதிய பின்னர், திவான்பகதூர் P. சுப்பையா முதலியாரவர்கள் பிரேரேபிக்க, திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் ஆமோதிக்க ஸர். T.N. சிவஞானம் பிள்ளையவர்கள் அக்கிராசனத் தமர்ந்தார்கள். பிறகு திரு. கி. குப்புச்சாமி முதலியார் தம் மாணவரொருவர் இயற்றிய வரவேற்புக் கவியைப் பாடினர். பின்னர் காரியதரிசி இவ்விதழில் மற்றொரு பக்கத்தில் அச்சிட்டிருக்கும் ஆண்டு அறிக்கைப் பத்திரத்தை வாசித்தனர். பிறகு தம் முன்னுரையைத் தொடங்குமுன், தலைவரவர்கள், பனகால் ராஜா இறந்ததற்கு வருந்தி, தாம் அவரோடு மந்திரியாகவிருந்து ஒத்துழைத்த வகையில் கண்ட அவர் உயர்வையும் குணாதிசயங்களையும் வியந்து, சென்னை இராஜதானிக்கு அவரால் உண்டாய இந்து மதத்தாபன சட்டம், இந்திய மருத்துவ துரைத்தன கலாசாலை போன்ற பல நன்மைகளை எடுத்துவிளக்கி, அவர் இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ பிறந்திருந்தால் அங்கும் முதன் மந்திரிப் பெரும் பதவி வகித்திருப்பர் என்று கூறி, அவர் இறந்த போதிலும் மீண்டும் அதிகரித்த சக்தியோடு பிராமணரல்லாதார் சமூகத்திற் பிறந்து அவர் முன்னேற்றத்திற்கே உழைப்பரென்று தாம் நம்புவதாகச் சொல்லி “பனகால் ராஜா திடீரென்று அகாலமாக இறந்துபட்டமைக்குச் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் இக்கூட்டம் பெரிதும் வருந்துவதோடு தம் தேறுதல் மொழிகளையும் அன்னார் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கின்றது” என்ற தீர்மானத்தைப் பிரேரிக்க சபையினர் எல்லோரும் வாளா நின்று ஏகமனதோடு அதை நிறைவேற்றினர். இதன் பின்னர் “நமது ஜார்ஜ் மன்னர் பிணியினின்றும் நீங்கி விரைவில் சுகம்பெற நாம் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்” என்ற தீர்மானம் நிறைவேறிற்று. பிறகு அவைத் தலைவர் தமது முன்னுரையைத் தொடங்கினர். அம்முன்னுரையின் தொடக்கச் சொற்கள், முடித்தற் சொற்கள் சிலவற்றை மட்டும் விடுத்து ஏனையவற்றை மற்றொரு பக்கத்தில் அச்சிட்டிருத்தல் காண்க.

அவைத் தலைவர் முன்னுரை பகர்ந்த பின்னர், திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் “பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே” என்னும் பொருள்பற்றி இச்சொற்றொடர் பதிந்துள்ள திருப்பல்லாண்டின் பொருளை விளக்கி, சண்டேசுவரர் சரிதத்தையும் சிவஞான சித்தியாரில் சில மேற்கோட் பாசுரங்களையும் விளக்கி, ஈசன் பாதகத்துக்குப் பரிசு வைக்குந் திறனை எடுத்துக் காட்டினார். பிறகு திரு. மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள் “சமய குரவர்” எனும் பொருள்பற்றி, நாம் நம்முடைய அறிவினால் அறியக்கூடாத பல பொருள்களை அநுபவத்தால் அறிந்து நமக்கு அறிவுறுத்தியதே சமயகுரவர் நமக்குச் செய்த பேருபகாரம் என்றும் நவீன ஆராய்ச்சிக்காரர்கள் சமய குரவர் அற்புதங்களைக் கூறும் புராணங்களில் சில பகுதிகளை மட்டும் உண்மையெனக்கொண்டு அவர்களைக் குறை கூறுவதும், ஏனைய பகுதிகளைப் பொய்யென்று தள்ளி அவர்கள் உயர்வை மறுப்பதும் முற்றிலும் ஒழுங்கீனத்துக்கும் அறியாமைக்கும் வீண் குழப்பத்துக்கும் காரணமாகின்றனவேயன்றி வேறெவ்வித பயனையும் தாராவென்றும், நாயன்மார்கட்கும் சமய குரவர்க்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் இன்னின்னவென்றும் விளக்கினர்.

பிறகு திருவெண்ணெய் நல்லூர் ஆலய தருமகர்த்தரும், தென் ஆற்காடு ஜில்லா போர்டு உறுப்பினரும் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் சீடரில் ஒருவருமாகிய உயர் திருவாளர் M. சின்னசாமி ரெட்டியார் அவர்கள் சமாஜத்தை அடுத்த ஆண்டில் திருவெண்ணெய் நல்லூரில் கூடும்படி அன்புடன் அழைத்தார்கள். அதற்குச் சமாஜத்தினர் ஒப்புக் கொண்டு திருவாளர் ரெட்டியாரவர்கள் பெருந் தகைமைக்கு நன்றி கூறினர்.



இதன் பின்னர், திரு. வி. உலகநாத முதலியாரவர்கள் “ஆலய சீர்திருத்தம்” என்னும் பொருள் பற்றி சிவாலயத்தின் பல பகுதிகளின் தத்துவ உட்கருத்துக்களை விளக்கி திருமூலர் திருமந்திரத்தை ஆதாரமாகக் கொண்டு மானிடர் யாக்கை வடிவு சிவலிங்கம் என்பன போன்ற உண்மைகளைக் குறிப்பாக உணர்த்தி, தற்போது ஆலயங்களில் செய்தற்குரிய சீர்திருத்தங்களை விவரித்தனர். பிறகு திரு. மணி. கோடீசுவர முதலியாரவர்கள் “நாம் இனிச் செய்ய வேண்டுவன” என்பது பற்றிச் சைவ சமய ஒழுக்கங்களில் தம்மாராய்ச்சிக் கெட்டிய குறைபாடுகளையும் சமயத் துறையில் குலம், கோத்திரம் முதலிய வேற்றுமைகளை உட்படுத்தி மக்களில் சில பகுதியினருக்குச் சிவாலயவழிபாடு அறவே இல்லாமற் போகும்படி நெடுநாளாக ஏனையோர் மறுத்து வருவது தவறென்பதையும் அதனால் அன்னார் புறச்சமயிகளாகி நம்முடைய சமயத்தவர் தொகை பெரிதும் ஆண்டு தோறும் குறைந்து வருகிற தென்பதையும் இப்பெருங் குறைபாட்டை நீக்கத் தீவிர முயற்சிகள் செய்தல் வேண்டுமென்பதையும் மிக்க ஆர்வத்தோடு பேசினர். பிறகு திரு கே. வஜ்ரவேல் முதலியார் “திருஞான சம்பந்தரும் சமணரும்” என்பது பற்றி, பெரிய புராணத்தில் பல பாசுரங்களை விளக்கி, சமணரைக்கழுவேற்றியது மன்னன் ஆணையேயொழிய ஆளுடைய பிள்ளையார் திருவருளுக்கு முரணான எப்பணியும் செய்திலரென்று கூறி நவீன ஆராய்ச்சி முடிபுகள் பொய்மையானவை என்று கூறினார். தமிழ் மறை ஓதியபின்னர் சபைகலைந்தது.

அடுத்த நாள் (24-12-1928) பிற்பகல் க-மணிக்கு சமாஜம் மீண்டும் கூடிற்று. தேவாரம் ஓதிய பின்னர் திரு. காவித்தண்டலம் வேதாசல முதலியாரவர்கள் “பஞ்சாக்கரம்” என்பதுபற்றி ஜீவகாருண்யம் முதலிய அரிய அறங்களைக் கைப்பற்றி ஒழுகாத வரையில் பஞ்சாக்கர ஜெபத்தில் பயனில்லையென்றும் பஞ்சாக்கரம் எவ்வாறு சைவநன்மக்கள் சமய வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப் படுவது என்றும் இனிது விளக்கினர். பிறகு திரு. E. N. தணிகாசல முதலியாரவர்

கள் "திருவாசகமும் முத்தமிழும்" என்னும் பொருள்பற்றி, பல பாசுரங்களை ஆராய்ந்து அவற்றுள் பொதிந்துள்ள இயலிசை நாடகத்தமிழ் நயங்களை விளக்கி, சிறப்பாக நாடகத் தமிழுக்குரிய பல சொற்றொடர்கள் எவ்வாறு அப்பாசுரங்களில் அமைந்து புதிய பொருள்களைத் தருகின்றன என்பதை நன்கு விவரித்தனர்.

பிறகு சமாஜவிதிகளில் சில சீர்திருத்தங்களும் நிர்வாகசபையினர், பத்திராசிரிய சபையினர் தேர்தலும் நிறைவேறின (மற்றொரு பக்கம் பார்க்க). முக்கியமாக, காரியதரிசியைப் பத்திராசிரியப் பொறுப்பாளராகவும் (Editor-in-charge) ஏனைய ஒன்பதின்மரை உறுப்பினராகவும் கொண்ட ஒரு பத்திராசிரிய சபை நிறுவப்பட்டது. சமாஜ நோக்கங்களைக்கூறும் 3(v) விதியின் இரண்டாவது வாக்கியமாக "சமயக் கலப்பற்றவைபோல் தோன்றிப் புராணம் என்ற பெயருடன் எழுதப்பட்டுள்ள சமயவிரோதமானதும் பொருளற்றதும் பொய்யானதும் ஒழுங்கீனமானதுமான கதைகளைப் பாடபுத்தகங்களிற் கலவாமல் காத்தல்" என்பதைச் சேர்க்க வேண்டுமென்ற தீர்மானம் காரியதரிசியால் பிரேரிக்கப்பட்டு, திரு. C. இராஜரத்தின முதலியாரால் ஆமோதிக்கப் பட்டது. பின்னர் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் அதை எதிர்த்தனர். காரியதரிசி தீர்மானத்தை வாபீசு வாங்கிக் கொள்வதாகச் சொல்லியதற்கு ஆமோதித்தவர் ஒப்பவில்லை. திரு. மணி. கோடீஸ்வர முதலியார் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய பிறகு தீர்மானம் பெரும்பான்மையோர் வாக்கால் (vote) நிறைவேறவில்லை.

இவைகட்குப் பின்னர் திரு. பண்டிதை கிருஷ்ணவேணி யம்மாளவர்கள் "பெண்ணடியவர் மூவர்" என்பது பற்றிக் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், திலகவதியாருடைய சரிதங்களை விளக்கி அன்னார் சைவ சமயத்தை எவ்வாறு பாதுகாத்து வளர்த்தனர் என்பதை மிகத் தெளிவாகக் காட்டி, தற்போது சைவப் பெண்மணிகட்கு எவ்வாறு ஆடவர்கள் உதவி புரிய வேண்டுமென்பதை நேர்மையாக விவரித்தனர். பிறகு திவான் பகதூர் P. சுப்பையா முதலியாரவர்கள் "அறிவுடைமை" என்னும் பொருளைப் பல திருக்குறள் மேற்கோள்களோடு விளக்கி இளைஞர்கட்குச் சமயக்கல்வி அவசியம் தேவை யென்றும் ஒவ்வொருவரும் தாம் கற்ற அறங்களை தமது வாழ்க்கையில் அமைத்து ஒழுகுவதே உண்மைச் சமய வாழ்க்கையும் அறிவுடைமையும் ஆகும் என்றும் முடித்தனர். பிறகு திரு. C. S. சுவாமிநாத முதலியாரவர்கள் "மரக்கறி யுணவு உயிர்க்கொலையாகுமா?" என்பது பற்றி மிக அழகாக ஸர் ஜகதீச சந்திரவஸு முடிபுகளின் துணை கொண்டு மரக்கறி வுயிர்க்கும் மாக்களுயிர்க்கு முள்ள வேற்றுமைகளை விளக்கி மரக்கறி யுணவும் உயிர்க்கொலை யாதலின் மீன மேஷ ரிஷபங்களைக் கொன்று புசிப்பதற்கும் மரக்கறியருந்தற்கும் பேதமில்லையென சிலர் கூறுவது முற்றிலும் தவறென்று தமது கொள்கையை விவரித்தனர். இதன் பிறகு அவைத்தலைவர் இரண்டு நாள் நடந்த சொற்பொழிவுகளைப் பற்றிய தமது கருத்துக்களை வெளியிட்டு முடிவுரை கூறினர். பின்னர் சபை கலைந்தது.

மூன்றும் நாள் பிற்பகல் ௧-மணிக்கு மறுபடியும் கூட்டம் தொடங்கியது.



தேவாரம் ஓதியதும் திரு. வல்லை. பாலசுப்பிரமணிய முதலியார் "நமது பத்திரிகை" என்பதுபற்றிப் பேசும்போது பத்திரிகை எவ்வாறு உலகத்துக்கு நிலைத்த பயனை வழங்குகின்றதென்றும் இங்கிலாந்தில் எவ்வாறு பத்திரிகைகட்கும் ஆசிரியர்கட்கும் பெரியதொரு ஆற்றலும் அந்தஸ்தும் இருக்கிறதென்றும் "சித்தாந்தம்" பத்திரிகையை ஆதரித்து ஆயிரக்கணக்கான பிரதிகளை வெளியிட்டு வழங்க உதவி புரிதல் சைவர்கள் செய்தற்குரிய முதற்கடனாகும் என்றும் செம்மையாக விளக்கினர். பிறகு "இறைபணி" எனும் பொருளை திருவாளர் பி. சமரபுரி முதலியாரவர்கள் பல தோத்திர சாத்திர மேற்கோள்களுடன் விளக்கி எல்லாம் இறைபணி யென்னும் சைவரின் கொள்கையே மிகச் சிறந்ததென முடித்தனர்.

பிறகு திருவாளர் திரு. வி. உலகநாத முதலியார் "ஸ்கந்தர் ஷஷ்டி, கார்த்திகை தீபம் ஆகிய இரண்டுபுண்ணியதினங்களையும் பொதுவான விடுமுறை நாட்களாகவாவது சைவர்கட்கு மட்டும் விடுமுறை நாட்களாகவாவது சென்னை அரசாங்கத்தார் தந்து நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்டுப்படி விளம்பரம் செய்யவேண்டுமென இச்சமாஜம் கேட்டுக் கொள்ளுகிறது" என்ற தீர்மானத்தைப்பிரேரேபிக்க திரு. C. இராஜரத்தினமுதலியார் அதை ஆமோதித்து, "சைவர்கட்கு மட்டும் விடுமுறை நாட்களாகவாவது" என்பதை நீக்கி அனைவருக்கும் பொது விடுமுறையாகவே தரவேண்டு மென்ற திருத்தப் பிரேரேபணையும் கொணர்ந்தனர். இதைத் திரு. வி. உலகநாதமுதலியார் ஒப்புக்கொள்ள, தீர்மானம் ஏகமனதோடு சபையினரால் நிறைவேற்றப் பட்டது. ஆருத்ரா தரிசனத்துக்கும் அவ்வாறே விடுமுறை தரவேண்டுமெனத் திரு. T. N தங்கவேல் முதலியார் கொண்டுவந்த பிரேரேபணை நிறைவேறவில்லை.

பின்னர் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை "தமிழ் நாட்டின் சமய வாழ்விலும் சமூகவாழ்விலும் தற்காலம் காணும் குழப்பங்கட்கும் சைவ மக்களின் ஆற்றற் குறைவிற்கும் காரணங்களைச் செவ்வையாய் ஆராய்ந்து இக்காலத்தின் தேவைகட்கும் சைவசமயம் எப்படி ஏற்றதாயிருக்கிறது என்பதை யுக்தி அனுபவங்கட்கு ஒப்பப் புலப்படுத்திச் சைவ உலகிற்கு இந்நாளில் நல்வழி காட்டியுதவும் பொருட்டுச் சைவ அறிஞர்களின் தனிக் கூட்டம் ஒன்று கூடிய விரைவில் கூட்டப்படுதல் அவசியம் என்று இம் மகா சமாஜம் கருதுகின்றது" என்ற தீர்மானத்தைப் பிரேரேபித்து அரியதொரு விரிவுரை நிகழ்த்தினார்கள். திரு. C. இராஜரத்தின முதலியார் இதை ஆமோதித்த பின்னர் திரு. கி. குப்புச்சாமி முதலியார் இதை எதிர்த்தனர். பிறகு திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரும் திரு. வி. உலகநாத முதலியாரும் இது அனைவரும் ஏகமனதுடன் நிறைவேற்றற் குரிய தீர்மான மென்று நன்கு விளக்கினர். பிறகு இத்தீர்மானம் வந்திருந்தோர் அனைவராலும் நிராக்ஷேபணையாக நிறைவேறிற்று.

பிறகு "சித்தாந்தம்" சென்ற ஜூலை இதழில் வெளியிட்டுள்ள பூவாளூர் சைவ சித்தாந்த சங்கத் தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்தன. இவைகளில் பல திருத்தப் பிரேரேபணைகள் வந்

தமையால் அவைகளை அமைதியாகச் செவ்வனே ஆராய்ந்து சமாஜத்தின் நிர்வாக சபையினரும், வெளியூர் ஆலோசனை சபையினரும் தங்கள் கருத்துக்களை அறிவித்துத் திருவெண்ணெய் நல்லூரில் ஈஸ்டர் விடுமுறையிலாவது கோடை விடுமுறையிலாவது நடத்தயிருக்கும் சமாஜக் கூட்டத்தில் முடிக்க வேண்டுமென சபையினரால் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பின்னர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் "சைவத்தின் இயங்கும் சக்தி" என்பது பற்றி பொருள் நயமும் சொல் வன்மையும் மிக்கதொரு விரிவுரை நிகழ்த்தி, அடுத்த படியாகச் செய்யவேண்டுவதியாதெனக் கடவுளிடம் முறையிட்டறிவதே சைவன் செய்யவேண்டியதென்றும் நாடோறும் இருமுறை ஒவ்வொருவனும் தான் செய்த அன்பற்ற செயல்களை உன்னி உள்ளம் புழுங்குவதோடு அது முதலேனும் அத்தகையன செய்வதில்லை யென்ற உறுதியோடும் முழுவன்போடும் வாழ்வதே மேன்மை யென்றும் விளக்கினார்கள். பிறகு சமாஜபோஷகருள் ஒருவராகிய பண்டிதரத்தினம் புழலை. திருநாவுக்கரசு முதலியாரவர்களியற்றிய மற்றொரு பக்கத்தில் அச்சிட்டுள்ள வாழ்த்துக் கவி வாசிக்கப்பட்டது. பிறகு அவைத் தலைவர் முடிபுரை கூறிய பின், காரியதரிசியார் தலைவருக்கும் சொற்பொழிவாளர் முதலியோருக்கும் வந்தனம் கூறினர். மூன்றுநாட்களும் தொடக்கத்திலும் இறுதியிலும் சொற் பொழிவுகளின் இடையிலும் தமிழ்மறை யோதிய திருமயிலைக் கபாலீச்சரத்தில் தேவாரத் தொண்டு புரியும் திருவாளர் வைத்தியலிங்க தேசிகருக்குத் தங்கப்பதக்கம் பரிசு அளிக்கப்பட்டது. கடவுள் வாழ்த்தோடு ஆண்டுநிறைவிழா இனிது முடிந்தது.

---

## அறிக்கை

நிகழும் விபவ௵ தைமீ ௧௨ வெள்ளிக்கிழமை தைப்பூச புண்ணிய தினத்தில் (25-1-1929) மாலை 6-மணிக்குச் சுகாதார மந்திரியார் சைவத்திருவாளர் கனம் - S. முத்தையா முதலியாரவர்கள் தலைமையில் சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று சென்னை கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, 150-வது எண்ணுள்ள எனது இல்லத்தில் நடைபெறும். திருவாளர் - C. S. சுவாமிநாத முதலியார் அவர்கள் B. A. "சமயத்தின் சாரம்" (Essence of Religion) என்பது பற்றி ஆங்கிலத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். பிறகு திருக்குறள் விளக்கவாசிரியர் திரு. கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் "சிவஞானபோதம்" பாடமாகத் தொடங்கித் திங்கட்கிழமைதோறும் நடத்தி வருவார்கள். அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் நண்பர்களோடு வந்து பயன்பெற விரும்புகிறேன்.

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

# மாணவர் பகுதி

## சைவசித்தாந்தம்

[திவான்பகதூர் ஸர் T. N. சிவஞானம் பிள்ளை]

சைவமாவது எதுவென்றும், அதன் சித்தாந்தம் எதுவென்றும், சிறிது ஆராய்வோம். சைவமெனில், சிவ சம்பந்தமுடையது என்று பொருள் கொள்வர் பெரியோர். அது என்னையோவெனின், சிவனைத் தெய்வமாகக் கொண்டு ஒழுகுவது என்பது அதன் பொருள். இச்சிவனைத் தெய்வமாகக் கொண்டு ஒழுகுகின்ற மக்களுக்குச் சைவர் என்று பெயர்.

இனி, இச்சைவர் தாங்கள் கொண்ட கொள்கையின் வண்ணம் ஓதுகின்ற நூல்களில் கண்டதொரு முடிபைச் சித்தாந்தமென்பது.

சைவர் எந்நூலைத் தமக்கு ஆதாரமாகக் கொண்டு தம் சமய முடிபை விளக்குகின்றார்களோவெனின்,

"வேதமுடன் ஆகம புராண இதிகாச முதல் வேறும் உள கலைகளை"க் கொண்டு என்பதாம். இதனையே,

"வேதம்பசு அதன்பால்மெய்யாகமம் நால்வர்
ஓதும்தமிழ் அதனின்உள்ளுறும்நெய் [போதம்மிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய்மெய் [கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்"

என்று எடுத்துக் காட்டினர் மேலோர்.

இச்செய்யுளில் குறித்தபடி, வேதம் முதல் நூலென்றும், ஆகமம் வழி நூலென்றும், பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திரங்கள் சார்பு நூலென்றும் அறிகின்றோம்.

இனி, வேதமும் சிவாகமங்களும் ஒரு பொருள் கொண்டன என்பதை விளக்குவதற்கே வேதத்தைப் 'பசு' என்றும், ஆகமத்தைப் 'பால்' என்றும், கூறினார். இவ்வாகமங்களின் நுண்ணிய பொருள்களை தேவார திருவாசகங்கள் என்பார், 'நெய்' என்றார். தேவார திருவாசகங்களின் உண்மையை விளக்கிக்காட்டுகின்ற மெய்ந்நூல் ஆகிய சிவஞான போதத்தினை, 'நெய்யின் உறு சுவை' என்றனர்.

ஆதலால் வேத சிவாகமங்களை வாசிப்போரும், அவையறிதற்கே யில்லாத மற்றவர்களும் தெரிந்து ஒழுகுவதற்குப் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சாத்திரங்களும் ஆதாரமாய் உள்ளன. இப்பதினான்கு சாத்திரங்களின் உள்ளும், 'பொய் கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்' என்னும் பெரியோன் அருளிய 'சிவஞான போதமே' உடலுக்கு உயிர்போல் இருக்கின்றது. இச்சிவஞான போதம் கூறும் பன்னிரண்டு சூத்திரங்களே சைவத்தின் முடிபாகும் சைவ சித்தாந்தம் எனப்படும்.

எனவே, இந்நூலுள் கூறுகின்ற பன்னிரண்டு சூத்திரங்களும் பொருள்கள் மூன்று என்றும், அவை எக்காலத்தும் அழியாது உள்ளன என்றும் உணர்த்துகின்றன. அப்பொருள்கள் மூன்று ஆவன, பதி, பசு, பாசம் என்பன ஆம்.

இனி, இம்முப்பொரு
யுணர்த்துவதற்கு எழு
முதல் மூன்று சூத்திர

அவ்வாறு பிரமாண
முப்பொருள்களினது
யுணர்த்துவன இரண்
சூத்திரங்களாகும்.

மூன்றுவது மூன்று
இம் முப்பொருள்களு
உணர்ந்த ஆன்மா த
உணர்ந்த இறைவனைய
சாதகங்களைப் போதி
களாகும்.

சாதித்தலால் அ
பயனை யடைவதற்குரி
இவையெனக் கூறுவன
சூத்திரங்களாகும்.

ஆகவே, இச்சைவ
உணர்ந்து கொண்டது
மேற்கூறிய முப்பொரு
பசு, பாசம் என்பனவா

இனி, சைவர்கள்
பதற்கு, காணப்பட்ட
காணப்படாத பதி உண்
டனர்.

இவ்விதப் பதியும்
தைச் செய்கின்ற இறை
பதி என்றும் உணர்ந்த

இப்பதியானது, நித்
என்னும் ஆன்மாக்க
யைக்கொண்டு தேகம்,
புறக்கரணம், உலகம்,
லியவைகளைக் கொடுக்கி
கன்ம மலத்தைக் கெ
அந்தக்கரணம், புறக்க
செல்வம் முதலியவைக
தற்கு உரிய விதி விலக்
பண்ணுகின்றது என்று

கத்துக்குப் பய
ருக்குக் கல்வி
யடைய வசதி
க ஆண்மக்கள்
அதற்கு அறு
த்தில் விவாகம்
டுமைகளை நீக்க
ப் பட்டவர்கள்.
சரிவர ஆற்றுது
மைக்கு அருக
கொடுமையும்
றக் கலந்த பரி
ம.

னிக்
மார்க்
ற்
ஞல் இயற்கை
கள்விக்கு ஒரு
த இக்கட்டுரை
அதைச் சற்று
. ஆணுக்குரிய
ஒருங்குபட தங்
ம், பெண்ணுக்
துக்குத் தாய்த்
வது பொருந்
பக்தர்களில் கட
அன்னையென்றும்
பாக்குக் கேற்ற
ர். கடவுளைச்
ரனுகவும் பாவி
மிகச் சிலர்.
அப்பனுகவாவது
துதான் மிகவும்
ம் வழி. அது
சகோதரர்களா
வோ கொண்டு
ரு அன்னையிட
ன்று சொல்லி
தக்கு.

ஆகையால் பெண்ணின் தன்மையென்பதும், தாய்த்தன்மையென்பதும் ஒன்றே. பெண்களெல்லாம் தாய்த் தன்மையை அடையத்தான் முயல வேண்டும். அதாவது, தாய்த் தன்மையிலடங்கிய உயரிய நற்குணங்களைப் பெறல் வேண்டும். அவை, தன்னலம் கருதாமை, அன்புப் பெருக்கம், அடக்கம், இனியவை கூறல், அழகு, இரக்கம், பொறுமை முதலியனவாகும். 'பெண்ணின் பெருமை' என்னும் புத்தகத்தில் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "மண் நீர் காற்று ஒளி முதலியன சேர்ந்து மரமாதல்போல அடக்கம் முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன" என்று கூறியிருப்பது ஞாபகத்தில் வைக்கற் பாலதாகிய உண்மை வாக்கு. அவைகளே மேலே தாய்த் தன்மை யென்று கூறப்பட்டிருக்கின்றன.

மேற்சொன்ன நூலாசிரியர் இன்னும் பெண்மையை இன்பநிலை யென்றும் கூறுவது பாராட்டத்தக்கது. மேற்சொன்ன நற்குணங்களின் வாயிலாகவே தான் உலகில் இன்பம் நிலவுகிறது.

அவைகளுக்கு விரோதமான பொறுமை, அடங்காமை, தன்னலம் முதலிய துர்க்குணங்களின் சாரமே துன்பம். இவைகள் அவர் நூலில் அழகாக விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் பெண்மை யின்றேல் இன்பமில்லை யென்பது பெறப்படுகிறது. அதாவது தாய்த்தன்மை யில்லாத விடத்து உலகில் இன்பத்தை அடைய முடியாது.

ஒரு வீட்டில் பெண் குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் முறையிலும் கணவனை ஆதரிப்பதிலும், உறவினர் சிநேகர் இல்லத்துக்கு வந்திருக்கும் போழ்



தும், குழந்தை முதலானவர்களில் யாருக்கேனும் நோய் பீடித்த காலத்து செய்யும் சிகிச்சையிலும், ஆதரவற்ற பிச்சைக்காரர்கள் யாரேனும் உணவு தேடி வருந்தும் போழ்தும் மேற்கூறிய தன்னலம் பாராமை, இரக்கம், பொறுமை, அடக்கம் முதலிய தெய்வீகக் குணங்கள் எவ்வளவு வெள்ளிடை மலையாய்க் காணப்படுகின்றன வென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஒரு நாள் குழந்தை அதிக நோயினுல் வருந்தும் போது தாய் தன் உடல் நலத்தை மறந்து, தான் உணவை உட்கொள்ள வேண்டியதையும் மறந்து, தூக்கத்தையும் மறந்து அன்புடன் பாடுபடுவதை உன்னிப் பார்ப்பின் அங்கே தெய்வத் தன்மை விளங்குகிறதென்பதற்கு ஐயமுண்டோ? தாய்த் தன்மையே அன்பின் பெருக்கம்! அன்பே தெய்வம்! ஆகையால் தாய்த் தன்மையே தெய்வத்தன்மை.

உலகத்தில் இன்பம் பெருகத் தாய்த் தன்மை பெருக வேண்டும். ஒரு பெண் தனக்கென்று ஒரு கணவனைத் தேடி அவனுடன் வாழ்ந்து குழந்தைகளைப் பெற்று இல்லறம் நடத்தும் முறையில் தாய்த்தன்மை வளர்க்கிருள் என்பது தெளிவாயிருக்க, இம்முறைக்கு எந்த காரணங்களாலோ அநுகூலம் பெருத பெண்களுக்குத் தாய்த் தன்மையை வளர்க்க வழியில்லை என்று கருதுவது தவறு. ஒரு பெண் கலியாணம் ஆகாமலிருக்கலாம்; அல்லது மறுகலியாணமில்லாத விதந்துவா யிருக்கலாம். அந்நிலையிலும் தாய்த் தன்மையை வளர்க்கமுடியும். அப்பெண் தானிருக்கும் குடும்பத்தில் தன்னுடன் வாழும் மற்றவர்களுக்காகவோ, ஒரு மருத்துவ சாலையிலுள்ள நோயாளிகளுக்காகவோ, ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள சிறுமிகளுக்காகவோ, பெண்களின் முன்னேற்றத்துக்காக நிறுவப்பட்டிருக்கும் சங்கங்களின் பொருட்டாகவோ, ஆசார சீர்திருத்தங்களின் சார்பாகவோ, அவரவர்கள் சக்திக்கும் வாய்ப்புக்கும் ஏற்றவாறு உழைப்பது முதலியவற்ருல் பெண்கள் தாய்த்தன்மையை உலகில் பெருக்கலாம்; தாங்களும் அடையலாம். உன்னிப் பார்த்தால் புருஷர்கள் கூட தாய்த் தன்மையை வளர்க்கலாம். ஆயினும் அதைப் பற்றி விவரிப்பது இக்கட்டுரையின் நோக்கமன்று.

தாய்த் தன்மையாகிய தொண்டு பெண்களால் தங்கள் தங்கள் குடும்பத்தை விட்டு வெளியிலும் செய்யப்பட வேண்டும். இல்லையானல் பெண்மையின் உயரிய நோக்கம் நிறைவேறுது. பெண்மையல்லது தாய்மை குடும்பத்தில் ஆரம்பித்து கிராமத்திலும் நகரத்திலும் நாட்டிலும் விரியவேண்டும். எல்லா மக்களிடத்திலும் ஜீவன்களிடத்திலும் பரவவேண்டும். அதிக சௌகரியங்கள் பெற்ற குடும்பங்களிலுள்ள பெண்கள் வசதிகள் குறைவாயிருக்கும் தங்கள் சகோதரிகளுக்காகப் பல துறைகளில் உதவவேண்டும். இவ்வழியில் தான் பெண் தர்மம் உண்மையில் நிறைவேறும். எந்தக் குடும்பத்திலும் வயது முதிர்ந்த ஸ்திரீகள் குடும்ப பாரத்தைத் தாங்க, பாலிய மக்கள் தயாரானவுடன் தங்கள் குடும்பத்துக்குவெளியே பல பரோபகார வழிகளில் தொண்டு செய்தல் அவசியம். அன்பு, இல்லத்தினின்று விரிந்து பரந்தால்தான் இல்லறதர்மம் பூர்த்தி அடையும்; தாய்மையின் தர்மம் கைகூடும். இதை வாசிக்கும் பெண்கள் த... ...மையின் பாக்கியத்தை ...னி மேலும்

187127.

மேலும் தாய்மையை வளர்க்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இக்கட்டுரையை நிறுத்துகின்றேன். ஓர் இல்லத்தில் தகப்பன் இல்லையாயினும் அவ்வளவு குறைவு ஏற்படாது. தாயில்லையாயின் குடும்ப காரியங்கள் நடவா. ஆண் தன்மை பெண் தன்மை இரண்டும் தேவையாயினும் பின்னர் கூறப்பட்டதே சற்று மேலான படியில் வைக்கற்பாலது. அங்ஙனமே உலகத்திலும் தாய்மையே உயரியது. அதன் பொருட்டுப் பெண்களும் உழைக்கவேண்டும். ஆண்களும் கூட்டுறவாயிருந்து உதவவேண்டும். தாய்மை வழியே உலகத்தின் பெருமை யென்பதை எவரும் மறக்க வொண்ணாது.

---

# “என்னிலும் இனியன்”

[“நவசக்தி” ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

“இவ்வுலகில் எனக்கினியர்யாவர்” என்று ஒருவன் உன்னி உன்னி ஆராயத் தலைப்படுகிறான். “அவர் இனியர் இவர் இனியர்” என்னும் முடிவு பெற்றுப் பெற்று, இறுதியில் ஒவ்வொருவர் பால் ஒவ்வொருவித குறைப்பாடு, தன்னலம் முதலிய காணப்பெற்று “எனக்கு நான் இனியன். என்னினும் இனியர் எனக்கு ஒருவருமில்லை” என்னும் முடிவிற்கு அவன் வருகிறான். ஏனையோர் இனியரல்லர் என்னும் முடிவைப் பற்றி விரிந்த ஆராய்ச்சி வேண்டுவதில்லை. ‘தனக்குத் தானே இனியன்’ என்று மனிதன் கருதுவதைச் சிறிது ஆராய்ந்தே தீரல் வேண்டும்.

உலகில் ஒருவன் பிறரை வஞ்சித்தலையும், பிறர்க்குக் கேடு சூழலையுங் காண்கிறோம்; கேட்கிறோம். அவன் தன்னைத் தான் வஞ்சிக்கவாதல் தனக்குத்தான் கேடு சூழ்ந்துகொள்ளவாதல் நினைவளவிலேனும் எண்ணுவனோ என்பது கூர்ந்து கூர்ந்து உன்னற்பாலது. உலகில் தற்கொலை போன்ற எண்ணங்களும் வினைகளும் நிகழ்கின்றன. அவை, ஒருவன் தன்னைத்தான் வஞ்சித்துத் தனக்குக் கேடு சூழ்தலின்பாற் பட்டனவல்லவோ என்னும் ஐயம் பிறக்கலாம். தற்கொலை போன்ற வினையாற்றப் பொதுவாக எவரும் ஒருப்படுவதில்லை. மனிதன் எதற்கும் ஒருப்படுவன்; ஆனால் அவன் தற்கொலைக்கு மட்டும் ஒருப்படல் அரிது; அரிது. சிலவிடங்களில் தற்கொலை நிகழ்வதின் உட்கிடக்கை யென்னை? மானக்கேடு முதலியன தற்கொலை நிகழ்வதற்குக் காரணமாக நிற்கின்றன. மானக்கேடு முதலிய காரணங்களை உற்றுநோக்கினால், “தன்னலன்” அவைகளின் அடியில் கிடத்தல் உணரலாம். “தன்னை” அதிகமாகக் கொண்டே மகன் தற்கொலையில் தலைப்படுகிறான். ஆண்டும் அவன் தன்னையே அதிகம் நேசித்தல் விளங்குகிறது. எனவே, உலகில் ஒருவன் “தனக்குத்தானே இனியன்” என்னும் எண்ணங்கொண்டே வாழ்ந்து வருதல் கவனிக்கத் தக்கது.

உண்மையில் ஒருவன் தனக்குத்தான் இனியனாக வாழ்கிறானா? இல்லை. “தனக்குத்தான் இனியன்” என்பது ஆராய்ச்சியில் போலியாக முடிதல் காணலாம். பத்துவயதில் ஒருவனுக்கு எது நல்லதாகத் தோன்றிற்றோ அஃதே



அவனுக்குப் பதினைந்து வயதில் தீயதாகத் தோன்றுகிறது. இருபதாம் ஆண்டில் ஒருவன் எதை ஏற்றமாகக் கொண்டானோ அதையே அவன் முப்பதாம் ஆண்டில் தாழ்வாகக் கொள்கிறான். நாற்பதாவது அகவையில் இனிமை பயக்கும் ஒன்று ஐம்பதாவது அகவையில் இன்னா பயப்பதாகிறது. கல்வி, நட்பு, ஆட்டம், ஒருத்தி பால் நேயம், உடை, உணவு, தலை மயிர்வெட்டு, சமயக் கோலம், கொள்கை முதலியவற்றை உளங்கொண்டு தமது வாழ்வு நூலை ஒவ்வொருவரும் ஆராயப் புகுந்தால் அவரது மாறுபட்ட உணர்வு அவருக்கே புலனாகும். ஆதலால் உலகில் எவரை இனியராகக் கொள்வது?

ஒருபோது இனியதாகத் தோன்றும் ஒன்று மற்றொருபோது இன்னாதாகத் தோன்றுவானேன்? மூலகாரணங் காணமுயலுதல் வேண்டும். முயன்றால் என்ன பெறுவோம்? அறியாமையன்றி வேறென்ன பெறுவோம்? அறியாமை தேயத் தேய மனிதனுக்குப் பொருள் விளக்கம் புலனாகிக் கொண்டே போகிறது. அறியாமை ஒவ்வொருவர் பால் ஒவ்வோர் அளவாக நிலவிக்கொண்டிருக்கிறது. முழு அறியாமை தேய்ந்து முழு அறிவு விளங்குதற்குள் மரணம் நேரலாம். என் செய்வது? மனிதன் நிலை இவ்வளவிலிருக்கிறது! இவ்வறியாமையால் தொடக்குண்டு கிடக்கும் மனிதன் உலகில் எத்துணை இடர் விளைக்கிறான்! எவ்வளவு இடர்ப்படுகிறான்! பின்னை எவ்வாறு உலகில் வாழ்வு நடாத்துவது? “நான் அறியாமையால் பீடிக்கப்பட்ட ஒருவன்; குறைபாடுடையேன்” என்னும் உணர்வொடு மனிதன் வாழ்வு நடாத்தினால், அவன் உய்யுநெறி காண்பன் என்று சுருங்கச் சொல்லக்கூடும். ஸோக்ரதர் என்னும் கிரீஸ் தேசத்துஞானி இந்நுட்பத்தையே உலகிற்கு அறிவுறுத்தினார். தன் குறைபாட்டை யுணர உணரக் குறைவிலா நிறைவாக உள்ள ஒன்றன் துணைகூடும். ஆகவே “தனக்குத்தான் இனியன்” என்பதில் உண்மையில்லை என்க.

“தனக்குத்தான் எல்லாம்” என்று இறுமாந்து அழியும் மக்கட்கு நல்வழி காட்டப் போந்த பெரியோர் பலர். அவருள் நமது தமிழ் நாட்டில் தோன்றிய ஒரு பெரியார் மீது நெஞ்சம் பதிகிறது. அவர் யாவர்? அவரே அப்பரென்னும் அறவோர். அப்பெரும்பெருமானார் உலகுக்கு உண்மை அறிவுறுத்துகிறார். அவ்வறிவுறுத்தல் வருமாறு:—

“என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்து புக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே”

அன்பர்களே! தமிழில் எழுந்த இவ்வறிவுரையை - அன்புமொழியை - அருளமுதை - கண்ணாரக்கண்டு உளத்தால் முகந்து உணர்வில் கூட்டுங்கள். அப்பர் எம்பெருமானார் “எவர் இனியர்” என்று காட்டுகிறார். கண் காள்! காண்மின்கள்! நெஞ்சே! நினைவாய்!

தொடக்கத்தில் உலகோர் கருதுமாறு “என்னில் யாரும் எனக்கினியாரில்லை” என்று குறித்துப் பின்னை மயக்கந் தெளிய, “என்னிலும் இனியான் ஒருவன் உளன்” என்று அப்பர் அருள்கிறார். அதற்குமேல் என்ன முயற்சி எழும்? “என்னிலும் இனிய ஒருவன் யாண்டுளான்” என்னும் ஆராய்ச்சியும், “அவனை புணரல் வேண்டும்” என்னும் விரைவும் முருகி யெழுமல்லவோ? அவ்வொருவன் யாண்டுளான்? யாண்டுளான் என்று உலகெலாஞ் சுற்றித்

தேட வேண்டுவதில்லை; நூல்களைப் புரட்ட வேண்டுவதில்லை; கழகங்கூட்ட வேண்டுவதில்லை. இவைகளால் அவனை யுணரல் இயலாது. அத்தகை ஒருவன் எங்கே வீற்றிருக்கிறான்? திருமூலர்,

"மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயினம் காடறி யாதேபுலம்புவம்
தேயமு நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமிக் நாட்டிடைக் கண்டுகொண்டேனே"

என்று அவ்வொருவ னிடங் காட்டுதல் உணர்க.

"இனியன் இன்னவன்" என்று அறிவு கொளுத்திய அப்பர் அத்திருப்பாட்டிலேயே அவ்வினியன் இருக்குமிடங் குறிக்கிறார். "என்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே" என்று அவர் அருளியவாற்றானறிக. ஈசன் இருக்குமிடம் உள்ளமே அந்தோ! உள்ளத்துள்ள ஒருவனை இத்துணை நாள் உணராது கிடந்த அறியாமை என்னே! என்னே! ஆண்டவன் உயிர்கள் பொருட்டு உலகைக் கொடுத்து, உடலைக் கொடுத்து, அவைகளை நல்வழிப்படுத்தி ஆட்கொள உள்ளத்திலும் வீற்றிருக்கின்ற பெருமையை நினையாத மனிதன் மனிதனா? என்னே ஆண்டவன் அருள்!

அப்பருள்ளிட்ட மற்றவரும் ஆண்டவன் உள்ளங்கோயில் கொண்டுள்ள உண்மையைப் பல விடங்களில் பகர்ந்துள்ளார். ஒவ்வொருவரும் தொடக்கத்திலேயே அந்நுட்பத்தை அறிவுறுத்தியிருக்கிறார். "தோடுடைய செவியன்" என்னும் முதற்றிருப்பதிகத்தில் திருஞான சம்பந்தர் "என்னுள்ளங் கவர் கள்வன்" என்றும், "கூற்றாயினவாறு" என்று தொடங்கிய உடனே அப்பர் சுவாமிகள் "பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" என்றும், அங்ஙனே வன்றொண்டரும் "பித்தா பிறைசூடி" என்னுந் தேவாரத்தில் "நினைக்கின்றேன் மனத்துன்னை" என்றும், வாதவூரடிகளும் "நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க - இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்றும் திருவாய் மலர்ந்துள்ளார். மற்றைய பெரியோர்களும் இவ்வுண்மையைச் செவ்வனே உலகிற்கு ஓதியிருக்கிறார்கள்.

மிக அணித்தாக உளத்துள்ளே எழுந்தருளி நம்மையியக்கும் ஒரு பொருளே நமக்கு இனியது. அப்பொருளினிடத்து நாட்டங்கொண்டு, அதன் வழியியங்கின், நமக்கு எல்லாம் இனியவையாகவே புலனாகும். அவ்வினிய ஒன்றை எங்ஙனம் உணர்வது? முதலாவது அவ்வொன்றே இனியது என்னும் உறுதிகொண்டு அதனை யறிவால் அடைதல் வேண்டும். அடைந்தால் அதன் இனிமை யுணரக்கூடும். இதனை மற்றுமோரிடத்தில் அப்பர் சுவாமிகள்,

"கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமுடி கவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை
[மருதனே"

என்று விளக்கியிருத்தல் காண்க.

மற்றுமொன்று ஈண்டுக் குறிக்கத்தக்கது. அஃது உள்ளே நிற்கும் இனியனைப் பற்றியது. அவன் "என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு...." நிற்பவன், என்று அடிகள் அறிவிப்பதை நோக்குதல் வேண்டும். உயிர்ப்பு என்பது பிராணன். பிராணன் வாழ்விற்கு இன்றியமையாதது. அஃது ஒடுங்கின் உயிர் நீங்கும். ஆண்டவன் உயிர்ப்பின் வழியே வாழ்வு நல்கி வருகிறான். ஆகவே உயிர்ப்பு முறையாக உள்ளே போகவும் முறையாக வெளியே வரவும் ஒழுங்கு படுத்திக் கொள்ளுதல் நலன். அதாவது ஞாயிற்றொளி காற்று



முதலிய இயற்கைவழி உடலோம்புதல் குறித்தவாறென்க. உள்ளங் கோயில் கொண்டுள்ள ஆண்டவனை யுணர்தற்கு நல்லுடல் தேவை. இதுபற்றி ஈண்டு விரித்துக் கூறல் வேண்டுவதில்லை.

உள்ளங் கோயில் கொண்டுள்ள இனிய இறைவனை யடைதற்குரிய வழி யாது? வழிகள் பற்பல கூறலாம். பொதுவாக ஈண்டு ஒன்று குறிக்கலாம். ஆண்டவனிடத்தில் கருத்தைச் செலுத்தியதும், அவன் அறிவிக்கத் தானறிவதையும், அவன் ஆட்டத் தான் ஆடுவதையும் அன்பன் நாளடைவில் உணர்வன். அவ்வுணர்வு "ஐயனே! இத்துணை நாள் உன்னுள்ளத்துள்ள பொருளுண்மை உணராது, எத்துணைப் பொய்ம்மைகள் நிகழ்த்தி வந்தனை; அவைகளை யெல்லாம் அப்பொருள் முன்னிலையில் ஆற்றியிருக்கின்றனை; நீ எண்ணும் எண்ணங்களையும் நீ ஆற்றும் வினைகளையுங் காணவல்லது ஒன்றுமில்லை என்பது உனது முன்னைய எண்ணம். இனி அங்ஙனம் ஒன்றுங் கருதாதே; ஒன்றுஞ் செய்யாதே. உள்ளும் புறமும் ஒத்த ஒன்றையே நினைந்துசெய்வாயாக. பொய்மையில் தலைப்படாதே" என்று இன்னுரை பகரும். அவ்வுள்ளொலி எழும்போது பொய்ம் மகன் மெய்ம்மகனாகிறான். "இத்துணை நாள் கெட்டேன்; குருடனா யிருந்தேன்; ஆண்டவனை ஏமாற்றி நான் ஏமாந்தேன்; ஆண்டவன் முன்னே என்னென்ன நினைந்தேன்; என்னென்ன செய்தேன்! ஐயோ! பாவியானேன்" என்று மகன் அழுகிறான்; பதைக்கிறான். மகன் அழுகை கேட்குந் தந்தை வாளாகிடப்பனோ? அவன் அருளாளன்; மகனைத் தள்ளமாட்டான்; ஆட்கொள்கிறான். அன்பர்களே! அந்நிகழ்ச்சியை என்னென்று சொல்வேன்? சொல்வதற்கு அருகனுமல்லேன். அடியார்கள் அருளிய திருப்பாடல்களைப் பாருங்கள்; படியுங்கள்; கசிந்து கசிந்துருகி ஆண்டவனை நோக்கி அழுங்கள்.

"யானே பொய் என்னெஞ்சும் பொய் என் அன்பும் பொய். ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று அழுதடி யடைந்த அன்பர் மொழியைப் போற்றுங்கள். இவ்வொரு வழி சாலச்சிறந்தது.

"பத்திலனேனும் பணிந்திலனேனுமுன்
உயர்ந்தபைங் கழல்காணப்
பித்திலனேனும் பிதற்றிலனேனும்
பிறப்பறுப் பாயெம் பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோவென்று
எத்தனையானும் யான்றொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே"

"தாமே தமக்குச் சுற்றமுந்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாய மிவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்க னாள்வான் பொன்னடிக்கே"

—மாணிக்கவாசகனார்

## மதிப்புரை

"முப்பெண்மணிகளின் வரலாறு" இவ்வரிய தமிழ் நூல் மறைமலையடிகளெனும் உயர்திரு சுவாமி வேதாசலம் அவர்களின் புதல்வியாரும் தமிழ் நாட்டுச் சைவமங்கையருட் சிறந்து விளங்குவோருமாகிய திரு. திருவரங்க நீலாம்பிகை அம்மையாரால் தூய - இனிய தனித்தமிழ் நடையில் எழுதப் பெற்றது. காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவரின் வரலாறும் அவர்கள் வாழ்க்கையிற் றோன்றும் பல சிறந்த உண்மைகளும் நுட்பங்களும் மிக அழகாக இந்நூலின்கண் விவரிக்கப்பட்டுள்ளன. பண்டைக்காலத்துச் சைவமங்கையரின் கல்வி ஒழுக்கச் சிறப்பை மீண்டும் இக்காலத்தவர்க்கு அளிப்பதற்கு இந்நூல் அரியதொரு திறவுகோல் ஆம். மங்கையரேயன்றி மாணவரும் ஏனையோரும் படித்துப் பயன் பெறுதற்குரிய நூல் இதுவெனல் மிகையாகாது. துரைத்தனத்தார் பாடபுத்தகமாகத் தேர்ந்தெடுக்க வேண்டிய நூல்களுள் இஃதொன்று. இத்தகைய அரிய நூல்களை மேன் மேலும் எழுதி யுதவத் தமிழ்நாடு இந்நூலாசிரியரை ஊக்குவிக்குமாக. இந்நூலின் விலை அணா 12. இது சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற் கிடைக்கும்.

# சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

## 23-வது ஆண்டு நிறைவு விழாத்தலைவர்

## மாஜி மந்திரி - திவான்பகதூர் சர். T. N. சிவஞானம் பிள்ளையவர்கள்

வா ழ் த் து ம ணி

அறுசீர் விருத்தம்

பூவினுயர் சன்மார்க்க நெறிபிறழா வாய்மைசெறி புகழ்மிக் கார்ந்த
நாவினுரை புனிதமெனு மத்துவித மெய்கண்டார் நற்றா ளேத்தித்
தாவிமகிழ் வளர்சைவ சித்தாந்த மகாசமா சத்தின்மேலாம்
தீவிரபக் குவக்கொள்கை நீடூழி நிலைபெற்றுச் சிறந்து வாழ்க! (௧)

கனிபரவு மலைமடந்தை யிடம்பிரியாப் பரமனரு ணல்குந் தெய்வ
இனியதமிழ் மணங்கமழு முயரியவிச் சமாசத்தி னிருபான் மூன்று
தனிமைதவ ழாண்டுநிறை விழாவதனுக் குரியசபா மண்ட பத்தைக்
கனியமன முறத்தந்த பச்சையப்பன் கலாசாலைத் தலைவர் வாழ்க! (௨)

வேதசரு மாவினது திருத்தொண்டிற் கிடையூறு விளையா வண்ணம்
காதலொடு வேலிகட்டிக் காத்தாண்ட காந்திமதி கண்ணி பாகன்
காதனடிக் காட்படுவார் செல்வமலிந் தோங்குநகர் நலங்கண் டேத்தச்
சீதமிகு பூம்பொழில்சூழ் மணிமாட நிறைவீதி திருநெல் வேலி. (௩)

ஊற்றுமிகுங் கழனிதொறு முழுமளக்கர் குழும்புபட வுழுந ராங்கே
காற்றுமுடி வளாவநடுங் கடைசியரா குலமருவு நலத்து மிக்க
தோற்றமிகு கார்காத்த வேளாளர் குலதிலக தூய்மை யாளர்
ஏற்றமிகு நாற்றிசையும் புகழ்பரவ மேம்படுநல் லினத்து வந்தாய்! (௪)

தேங்கமழு முயர்கல்வி யறிவடக்க மொழுக்கமிகு தொன்மை சான்ற
ஆங்கிலத்திற் பீயேவிந் தியடிப்டி கலெக்டரென வணிபெ றச்செய்
ஓங்கியநன் னீதியொடிங் காசுரிமை செலுத்தியநின் னுயர்வை நாடித்
தாங்குபுகழ் திவான்பகதூர் சர்பட்ட மாதியவுந் தாங்கப் பெற்றாய். (௫)

உற்பத்தி யாதியமந் திரியாகப் பொதுநலநல் லூழி யத்தில்
நற்புத்தி யோடியற்றிப் பேர்பெற்ற வதிவிரத நன்மை யாள
பொற்பகலா டிஸ்டிரிகட் போர்டுபிரசி டெண்டாகப் பொருந்தச் செய்தும்
தற்பரன்செந் தினகரிருப் புப்பாதைத் தாபிக்கத் தலையாய் நின்றாய். (௬)

விதிவிலக்கின் படியனைத்தும் பொதுநன்மைக் கானவெலாம் வியன்பெற் றோங்க
மதிமிகச்செய் துயரியநின் செயலனைத்து மின்னதென வழங்கற் பாற்றோ
அதிபதியாய்ச் சைவத்துல் லியராய்நல் வழிப்படுத்த அமரும் வான்றோய்
நிதிபதியாய் அறநெறியைக் கடைபிடித்தின் குலவிவரு நியதி யாள! (௭)



சிவஞானந் தழைத்தோங்கப் பரமனருட் கையுறையாய்த் திகழு மெய்மைச்
சிவஞான போதமுயிர்க் காதாரமென் றுணர்வளித்துஞ் சீர்சான் மிக்க
சிவஞான பாடியநற் கர்த்தரெனு மவர்நாமந் தெரிக்கப் பெற்ற
சிவஞானப் பேர்நிலவத் தலைமைவகித் தகமகிழச் செய்த வுன்றன். (௮)

நன்மரபின் வழிவருவார் மனைவாழ்க்கைக் குரியதொரு நற்புதல்வர்
தொன்மைதவழ் செல்வமிகு சிவபக்தி யறியவுந் துலங்கப் பெற்று
தன்மைமிகு முபகாரச் சிந்தைமகிழ் வோடுநிதந் தரணி தன்னில்
மன்றுணடம் புரியுமவர் திருவருளா ணீடூழி மகிழ்ந்து வாழ்க! (௯)

சொற்பொழிவு நிகழ்த்தியவென் னுப்தசகோ தரர்களொடு தூய்மைத் தாய
பொற்பகலாப் பெண்ணடியார் சரிதமதை வெகுநயமாய்ப் புகன்ற செல்வி
கற்பகலா நிருவாக சபையினர் காரியதரிசி கவின்சேர் வாச
நற்புகழோ டிருந்துகேட் டவராதி நாளுளு நன்கு வாழ்க. (௰)

மேற்படி சமாஜப் போஷகரி லொருவராகிய
பண்டிதரத்தினம்
குகஸ்ரீ - புழலை - திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
இயற்றியது
(மிராசுதார், செம்பியம், பிரம்பூர்)

---

# சைவர்கட்கு ஒரு வேண்டுகோள்

நமது பத்திரிகையை ஆதரிப்பதற்காக, போஷர்களையும் ஆயுள் அங்கத்தவர்களையும் சேர்த்து அவர்கள் பேருதவியைப் பெறுவதற்காக ‘நவசக்தி’ ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியா ரவர்களும் நானும் தூத்துக்குடி, ஸ்ரீ வைகுண்டம், திருநெல்வேலி முதலிய இடங்கட்குச் சென்றோம். அவ்வூர்வாசிகளும் எங்களுடனிருந்து உழைத்ததின் பலனைத் திருவாளர்கள் சி. வ. நல்லப்பெருமாள் பிள்ளையவர்கள், க. கு. குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள், N. இராமலிங்கம் பிள்ளையவர்கள், N. சங்கர நாராயண பிள்ளையனவர்கள், மேடை தளவாய் திருமலையப்ப முதலியாரவர்கள் போஷகர்களாகவும்;- திருவாளர்கள் G. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், T. K. சிதம்பரநாத முதலியாரவர்கள் M. L. C, V. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், T. P. நெல்லைநாயகம் பிள்ளையவர்கள், R. P. சேதுப்பிள்ளையவர்கள், V. K. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள், M. V. நெல்லையப்பப் பிள்ளையவர்கள், A. முத்தையா பிள்ளையவர்கள், பிறவிப்பெருமாள் பிள்ளையவர்கள், டாக்டர் K. சுப்ரமண்ய பிள்ளையவர்கள், V. M. கல்யாணசுந்தரம் பிள்ளையவர்கள், S. முருகப்பப் பிள்ளையவர்கள் ஆயுள் அங்கத்தவர்களாகவும் சேர்த்துள்ளார்கள். அவர்கட்கும், உடனிருந்து உழைத்த திருவாளர்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், அவர் மாணவர்கள், M. V. நெல்லையப்ப பிள்ளை யவர்கள், சுந்தர ஓதுவா மூர்த்தியவர்கள், வ. திருவரங்கம் பிள்ளையவர்கள், ல. இராமசாமிப் பிள்ளையவர்கள் முதலியோருக்கும் இச்சமாஜத்தின் நன்றி என்றும் உரித்தாகும். சைவர்கள் ஆயிரக்கணக்காக இவர்களைப்போல் உழைத்தும் உபகரித்தும் சமாஜத்தையும் பத்திரிகையையும் ஓம்பி வருமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

# சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை

## 1905ஆம் நிறுவப்பட்டது

## 23-வது ஆண்டு அறிக்கைப் பத்திரம்

" எவ்வுயிரும் நீங்கா துறையும் இறை சிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு "

### சமாஜம் நிறுவிய காலம்

இச்சமாஜம் சைவ சித்தாந்த சமயத்தையும் அதன் தத்துவ சாஸ்திர முடிவுகளையும் ஞானத்தையும் யாவருக்கும் எளிதிலேவிளக்கும் பொருட்டு1905ஆம் ஜூலைமாதம் 7-ந்தேதி நிறுவப்பட்டது. பின்னர் 31-12-1927-ல் நிருவாக சபையினராலும் சமாஜ அங்கத்தினர்களாலும் புதுச் சேரியில் கூடிய கூட்டத்தில் புதிய அமைப்பு விதிகளால் புதுப்பிக்கப்பட்டது.

### இடம்

இச்சமாஜத்தின் காரியாலயம் தற்சமயம் 150, கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலும் "சித்தாந்தம்" தொழில் நிலையம் 88, திருப்பள்ளித் தெருவிலும் நிலை பெற்றிருக்கின்றன.

### உறுப்பினர் தொகுதி

சமாஜத்தின் உறுப்பினர்கள் நால் வகைப்படுவர். அவர்கள் போஷகர், ஆயுள் அங்கத்தினர், கௌரவ அங்கத்தினர், அங்கத்தினர் என்பவராவார்கள். இவர்களில்,

| | |
|---|---|
| ஆண்டு முதலில் இருந்தவர்கள் | 93 |
| இவ்வாண்டில் சேர்ந்தவர்கள் | 838 |
| ,, நீங்கியவர்கள் | 249 |
| இவ்வாண்டின் முடிவிலிருப்பவர்கள் | 582 |

### நிருவாக உறுப்பினர்கள்

சமாஜத்தின் காரிய நிருவாக உறுப்பினர்களின் இனம் 20. அவர்கள்,

| | | |
|---|---|---|
| தலைவர் | ... | 1 |
| உதவித் தலைவர் (உள்ளூர்) | | 1 |
| ,, (வெளியூர்) | ... | 1 |
| காரியதரிசி (உள்ளூர்) | ... | 1 |
| ,, (வெளியூர்) | ... | 1 |
| உதவிக் காரியதரிசி | ... | 1 |
| பொருட் காப்பாளர் | ... | 1 |
| பத்திராசிரியர் | ... | 1 |
| உதவிப் பத்திராசிரியர் | ... | 1 |
| மற்ற உறுப்பினர்கள் | | 11 |
| ஆகமொத்தம் | | 20 |

இவ்வாண்டில் நிருவாக உறுப்பினர் கூட்டம் ஏழு முறை நடைபெற்றது. அதில் கூட்டத்திற்குச் சராசரி வந்தவர்கள் 9 பேராவர். காரிய நிருவாக உறுப்பினர்களில் திருவாளர் திவான் பகதூர் P. சுப்பையா முதலியாரவர்கள், வெளியூர் போவதை முன்னிட்டு விடுதலைச்சீட்டு பெற்றுக் கொண்டதின் பேரில் 21-2-28-ல் கூடிய கூட்டத்தில் திருவாளர் தி. ச. சுந்தரம்பிள்ளை யவர்களையும்; திருவாளர்கள் கே. நாராயணசாமி முதலியார், S. தர்மலிங்க நாயக்கர் ஆகிய இருவரும் யாதொரு கூட்டத்திற்கும்வராததை முன்னிட்டு அன்



னோர்களுக்குப் பதிலாகத் திருவாளர்கள் S. வேங்கடாசலம் முதலியாரவர்களும், வல்லை. பாலசுப்பிரமணிய முதலியா ரவர்களும் 17-10-1928-ல் கூடிய கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். திருவாளர் C. இராஜரத்தின முதலியார் உதவிக் காரியதரிசி வேலையினின்றும் நீங்கிக் கொண்டமையால், திருவாளர் T. K. சுந்தரம் பிள்ளையவர்கள் 27-8-1928 முதல் உதவிக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார்கள்.

### வெளியூர் நிருவாக சபை உறுப்பினர்கள்

இவர்கள் கீழ்க்குறித்த இடங்களில் உள்ளவராவார்கள்

| | | |
|---|---|---|
| செங்கல்பட்டு | .... | 3 |
| வட ஆற்காடு | .... | 3 |
| சித்தூர் | .... | 3 |
| சேலம் | .... | 3 |
| கோயமுத்தூர் | .... | 3 |
| நீலகிரி | .... | 2 |
| தென் ஆற்காடு | .... | 3 |
| தஞ்சாவூர் | .... | 3 |
| திரிச்சிராப்பள்ளி | .... | 3 |
| மதுரை | .... | 3 |
| இராமநாதபுரம் | .... | 3 |
| திருநெல்வேலி | .... | 3 |
| பெங்களூர் | .... | 1 |
| புதுக்கோட்டை | .... | 2 |
| திருவனந்தபுரம் | .... | 1 |
| புதுச்சேரி | .... | 3 |
| ஆகமொத்தம் | | 42 |

இவர்களின் உதவியும் ஆலோசனையும் வேண்டும் பொழுதெல்லாம் உபயோகித்துக் கொள்ளப்பட்டன.

### பொதுக் கூட்டங்கள்

1928ஆம் ஜனவரிமீ 30உ வேளாளதேனாம்பேட்டையில் திரு. அ. சிவசங்கர முதலியார் தலைமையில் திருவாளர் திரு. வி. உலகநாத முதலியாரவர்களால் "நல்லாரிணக்கம்" என்பது பற்றியும் திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்களால் "இறை வழிபாடு" என்பது பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

1928ஆம் பிப்ரவரிமீ 4உ திருமயிலாப்பூரில் சர் T. N. சிவஞானம் பிள்ளை அவர்கள் தலைமையில் திருக்குறள் விளக்க ஆசிரியர் திரு. கி. குப்புச்சாமி முதலியார் அவர்களால் "ஐந்தெழுத் துண்மை" என்பதுபற்றிப் பல மேற்கோள்களோடு மிகத் தெளிவாக ஓர் அரிய சொற்பொழிவும், மகாமகோபாத்யாய திரு. உ. வே. சாமிநாத அய்யர் அவர்களால் "பண்ணேனுனக் கான பூசை" என்னும் தாயுமானவர் திருவிருத்தத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் பதிந்துள்ள பல அரிய பொருள்களைப் பற்றி விரிவுரைகளும் நடந்தன.

1928ஆம் செப்டம்பர்மீ 23உ திருவாளர் E. N. தணிகாசல முதலியாரவர்கள் தலைமையில் பெத்துநாய்க்கன் பேட்டை ஏழு கிணற்று டிவிஷனில் திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் "பக்தி" என்பது பற்றி ஆங்கிலத்தில் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

இம்மூன்று கூட்டங்கள் இனிது நடைபெறுமாறு உதவி புரிந்த தேனாம்பேட்டை வாசிகளுக்கும் திருமயிலை வாசிகட்கும் பெத்துநாய்க்கன்பேட்டை வாசிகளுக்கும் சமாஜம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இதுபோல இன்னும் பல கூட்டங்கள் ஒவ்வோர் பாகங்களில் நடைபெறுமாறு பல புண்ணிய சீலர்கள் உதவி புரிய முன் வருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

## "சித்தாந்தம்" பத்திரிகை

1927௵ ஜூலை மாதம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்களின் தலைமையில் சென்னை பாலெஸ் தியேட்டரில் நடந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானித்தபடி சிவபுண்ணிய சீலர்கள் சிலரின் பேருதவியைக் கொண்டு "சித்தாந்தம்" பத்திரிகை 1928௵ ஜனவரி மாதம் முதல் மீண்டும் தொடங்கப்பட்டு வெளி வரலாயிற்று. அதற்குரிய மாதச் செலவிற்காக அன்புடன் உதவி புரிந்த புண்ணிய சீலர்களும் அவர்கள் கொடுத்த நன்கொடையும் கீழ் வருமாறு :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் | | ... | 80 | 0 | 0 |
| 2. திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் | சென்னை | ... | 58 | 12 | 0 |
| 3. ,, S. கனகசபாபதி பிள்ளை | திருச்சி | ... | 58 | 12 | 0 |
| 4. ,, A. சோமசுந்தர செட்டியார் | சென்னை | ... | 58 | 12 | 0 |
| 5. ,, M. C. சோமசுந்தர முதலியார் | ,, | ... | 58 | 12 | 0 |
| 6. ,, P. தாணப்ப முதலியார் | ,, | ... | 25 | 0 | 0 |
| 7. ,, P. நடராஜ முதலியார் | ,, | ... | 25 | 0 | 0 |

ஏழு ஆண்டுகளாக வெளி வாராதிருந்த "சித்தாந்தம்" பத்திரிகை மீண்டும் வெளிவரப் பேருபகாரம் செய்த புண்ணிய சீலர்களுக்குச் சமாஜம் என்றும் நன்றி யுடைத்து.

சமயத்துறையில் மிகக் குழப்பமும் பலவித ஆராய்ச்சியுமுள்ள இக்காலத்தில் பத்திரிகையை ஒழுங்காக நடத்தி வந்த பத்திராசிரியர் மணிமங்கலம் திருநாவுக்கரசுமுதலியாரவர்களுக்கும், உதவிப் பத்திராசிரியர் வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்கட்கும், கட்டுரைகள் வழங்கிய பேரறிஞர்களுக்கும் சமாஜம் என்றும் மறவா நன்றி பாராட்டும் கடமைப்பட்டது.

## வரவு செலவுக் கணக்கு

23-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்கு 1927௵ டிசம்பர்மாதம்1-தேதி முதல் 1928௵ நவம்பர்மாதம் 3-தேதி வரை நடந்த நடவடிக்கையின் குறிப்புகளாகும். இவைகளைச் சரிவர வைத்து வந்த திருவாளர் C. இரத்தின முதலியாரவர்களுக்கும் மாதா மாதம் கணக்குகளை நன்குபரிசோதித்துத் தம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்து வந்த கணக்காளர் திரு. வே. மாணிக்க முதலியாரவர்கட்கும் சமாஜத்தின் நன்றி உரித்தாகும். அவ்வவ் மாதக் கணக்கும் ஆண்டு முதலிலிருந்து அம்மாதக் கடைசி வரையுள்ளதும் சேர்த்து மாதா மாதம் பத்திரிகையில் வெளிவந்தது நோக்கத் தக்கது. இவ்வருடத்திய வரவு செலவுக் கணக்கு கீழ்வருமாறு :

### வரவு

| | | | |
|---|---|---|---|
| சித்தாந்தம் சந்தா வசூல் | 810 | 6 | 0 |
| ,, அச்சிடநன்கொடை | 365 | 0 | 0 |
| விளம்பர வரவு | 17 | 0 | 0 |
| கூட்டங்கட்கு நன்கொடை | 35 | 0 | 0 |
| வி. பி. தபால் வரவு | 28 | 6 | 0 |
| சந்தா முன் பணம் | 11 | 8 | 0 |
| டிபாசிட் வட்டி வரவு | 4 | 7 | 6 |
| வே. ஐ. நா. சங்கம் டிபாசிட் | 163 | 0 | 0 |
| தபாலாபீஸ்சேவிங்ஸ் டிபாசிட் | 57 | 0 | 0 |
| மொத்தம் | 1491 | 11 | 6 |
| ஆரம்ப இருப்பு | 74 | 8 | 6 |
| | 1566 | 4 | 0 |



### செலவு

| | | | |
|---|---|---|---|
| சித்தாந்தம் அச்சுக்கூலி காகிதம் உள்பட | 480 | 12 | 0 |
| பிளாக்குகள் ரப்பர் ஸ்டாம்புகள் | 12 | 8 | 0 |
| கூட்ட அறிக்கை பிரவேசவிண்ணப்பம் அச்சுக்கூலி | 14 | 8 | 0 |
| வருடாந்தரக் கூட்ட அறிக்கை செலவு முதலியன | 73 | 8 | 0 |
| தபால் செலவு | 208 | 4 | 9 |
| கணக்கு புஸ்தகம் பேனா முதலியன | 8 | 9 | 0 |
| சில்லரைச் செலவு | 29 | 0 | 9 |
| வேளாள ஐக்கியநாணயச்சங்கம் டிபாசிட் | 644 | 7 | 6 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கி | 82 | 4 | 0 |
| மொத்தம் | 1553 | 14 | 0 |
| முடிவு கையிருப்பு | 12 | 6 | 0 |
| | 1566 | 4 | 0 |

## சமாஜத்தின் பொருள் வலிவு

| | | | |
|---|---|---|---|
| வே. ஐ. நா. சங்கத்தில் டிபாசிட் | 481 | 7 | 6 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கி | 25 | 4 | 0 |
| கையிருப்பு | 12 | 6 | 0 |
| மொத்தம் | 519 | 1 | 6 |

## நன்றி கூறுதல்

22-வது ஆண்டு விழாவைச் சிறப்புடன் நடாத்துவித்த புதுவை மாநகர் வாசிகட்கும், ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் சிஷ்ய கோடி வர்க்கத்தினர்களுக்கும் ஏனைய சைவசித்தாந்த உழைப்பாளர்களுக்கும் சமாஜ நன்றி என்றும் உரித்தாகும்.

"சித்தாந்தம்" மீண்டும் வெளி வந்ததை அன்புடன்வரவேற்று உயரிய மதிப்புரைகள் எழுதித் தமிழ் நாட்டில் பரவச் செய்த சகோதர பத்திரிகைகளுக்கும் சைவசித்தாந்த வல்லுநருக்கும் சமாஜம் என்றும் மாறா நன்றியுடைத்து.

பத்திரிகை செவ்வனே அழகுடன் வெளி வருவதற்குப் பெரும் உதவியாயிருந்த சாது அச்சுக்கூடத் தலைவர் திருவாளர் திரு. வி. உலகநாத முதலியாரவர்கட்கும், சமாஜ நிருவாகக் கூட்டம் நடைபெறுதற்கு இடவசதிகள் ஏற்படுத்திக் கொடுத்த திருவாளர் M. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கட்கும், பத்திரிகை வெளி வருதற்கும், சமாஜத்தின் கணக்குகளைச்சரிவர வைத்தற்கும், இன்னும் பல வகையினும் சமாஜத்திற்குப் பேருதவி புரிந்த உதவிக் காரியதரிசி திருவாளர் தி. க. சுந்தரம் பிள்ளை அவர்கட்கும் சமாஜத்தினர் பெரிதும் நன்றி யுடையார்.

## வேண்டுகோள்

மேன்மேலும் இச்சமாஜத்தின் அரிய நோக்கங்களை ஈடேற்றுவதற்கும், சமய முன்னேற்றத்திற்குரிய சமய சீர்திருத்தம், ஆலய சீர்திருத்தம், மட சீர்திருத்தம் முதலியவைகளில் செவ்வனே உழைத்தற்கும், பத்திரிகை மிகவும் சிறப்பாக நடைபெறுதற்கும், ஆயிரக்கணக்கான வகையில் தமிழ் நாடெங்கும் பரப்புவதற்கும், சைவ சமயத்தைப்

பற்றிய பல நவீன அபிப்பிராயங்களை ஆராய்ந்து உண்மைச் சைவ சமயத்தை உலகெங்கும் பரப்புவதற்குப் பிரசாரகர்களை ஏற்படுத்திப் பணி செய்வதற்கும், சைவாபிமானிகள் ஆயிரக்கணக்காக முன் வந்து பெரும் பொருள் திரட்டிச் சமாஜத்திற்கு உதவி, இச்சமாஜத்தினரை ஊக்குவித்து, தந்நிகரில்லா சைவ சித்தாந்த சமயத்தை உலகெங்கும் உண்மையில் மிளிரச் செய்யும் திருப்பணியில் அன்பர்கள் ஈடுபடுவார்களென முழுமுதற்கடவுள் திருவடியை வழுத்துகின்றோம்.

"ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே"

இங்ஙனம்:
உத்திரவின்படி,
ம. பாலசுப்ரமண்ய முதலியார்,
காரியதரிசி.

## பிரிவாற்றுமை

சைவத் திருவாளர் கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் பி. ஏ. அவர்கள் சென்ற 5-1-29 ல் சிவனடி சேர்ந்தார்கள். திரு. செட்டியார் அவர்கள் சைவ உலகுக்குச் செய்துள்ள நன்மைகள் பல. அவர், உடல் பொருள் ஆவி மூன்றையும் சைவ முன்னேற்றத்துக்கே தத்தஞ் செய்த பெருந்தியாகி. அவர் செய்த சொற்பொழிவுகளும் தலைமையுரைகளும் ஆங்கில முறைப்படி வெளிவந்திருக்குமேல் பெருநன்மை விளைந்திருக்கும். சைவர்கள் மறக்கொணாச் செயல் பல புரிந்த திரு. செட்டியாரவர்களுக்குச் சைவ உலகம் செய்ய வேண்டிய உதவி இனித்தா னிருக்கிறது. அவர் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பது அவர்க்குச் செய்யும் உதவியாகும். அவர் விருப்பம் என்ன? திருமுறைகள் பரவ வேண்டுமென்பது அவர் விருப்பம். அவர் தம் பெரும் பொழுது திருமுறை ஆராய்ச்சியிலேயே செலவழிந்தது. எனவே சைவர்கள் திருமுறைகளை ஆயிரக் கணக்கில் ஒழுங்குபட அச்சிட்டுப் பரப்ப உதவி புரிந்து, தாங்கள் திரு. செட்டியார் மாட்டுக் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துவார்களாக. சைவத்திலேயே பிறந்து சைவத்திலேயே வளர்ந்து சைவமே பேசிவந்த சதாசிவ செட்டியார் ஆன்மா சதாசிவத்தில் சாந்தியுற்றிருக்குமாக.

திரு. செட்டியார் அவர்கள் பிரிவாற்றுமை தெரிவிக்க, சைவ சித்தாந்த மகா சமாஜம், சைவ பரிபாலன சபை, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை இவைகளின் ஆதரவில் 12-1-29ல் சென்னைக் கந்தசுவாமி கோயில் வசந்த மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டங் கூடியது.

சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் தலைமை நீதிபதி திவான்பகதூர் ஒ. தணிகாசலம் செட்டியார் அவர்கள் தலைமையில் அறிஞர் பலர் திரு. செட்டியார் அவர்கள் பிரிவாற்றுமைக் கிரங்கிப் பேசினர்; அவர் குணப்பெருமை பலவற்றைப் பாராட்டினர். அக்கூட்டத்தில் திரு. செட்டியார் அவர்கட்கு ஒரு நினைவுக்குறி காண வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதனை நிறைவேற்றி வைக்க, திவான்பகதூர் ஒ. தணிகாசலம் செட்டியார் அவர்களைத் தலைமையாகக்கொண்ட ஒரு கூட்டம் நியமிக்கப்பட்டது.

1928 ௵ டிசம்பர்௴ 23, 24, 25ந் தேதிகளில்
சென்னை மாநகரின்கண்
சர். T. N. சிவஞானம் பிள்ளை அவர்கள்
தலைமையிலே நடைபெற்ற
சைவ சித்தாந்த மகாசமாஜத்தின்
இருபத்தி மூன்றும் ஆண்டு நிறைவிழாவிலே
1929 - ம் ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காரிய நிருவாக உறுப்பினர் முதலியோர்

### காரிய நிருவாக சபை (சென்னை)

**தலைவர்**

1. ஸ்ரீமான் திவான் பகதூர் சர். T. N. சிவஞானம் பிள்ளை அவர்கள், மயிலை.

**உதவித் தலைவர்கள்**

2. திரு. T. நல்லசிவம் பிள்ளை அவர்கள், B. A. B. L. கச்சேரிசாலை, மயிலை.
3. திரு. S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B. A. L. T. விழுப்புரம்.

**காரியதரிசிகள்**

4. திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A. B. L. 150, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, ஜார்ஜ்டவுன்.
5. திரு. M. சின்னசாமி ரெட்டியார் அவர்கள், *Trustee & Dt. Board Member,* திருவெண்ணெய்நல்லூர்.

**உதவிக் காரியதரிசி**

6. திரு T. K. சுந்தரம் பிள்ளை அவர்கள், 88, திருப்பள்ளித்தெரு, ஜார்ஜ்டவுன்.

**பொருட் காப்பாளர்**

7. திரு. T. N. தங்கவேலுமுதலியார் அவர்கள், 22, விநாயகமேஸ்திரிதெரு, ஜார்ஜ்டவுன்.

**பத்திராசிரியர்**

திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A. B. L. 150, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, ஜார்ஜ்டவுன்.

**உதவிப் பத்திராசிரியர்**

8. திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் அவர்கள், B. A. 15, முத்துகிருஷ்ணன் தெரு, ஜார்ஜ்டவுன்.

**இதர உறுப்பினர்**

9. திரு. T. V. உலகநாத முதலியார் அவர்கள், இராயப்பேட்டை.
10. திரு. P. S. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், பத்திராசிரியர் "லோகோபகாரி", சிந்தாதிரிப்பேட்டை.
11. திரு. T. பாலசுந்தர முதலியார் அவர்கள், சொந்தக்காரர், சோல்டன் கம்பெனி, திருவல்லிக்கேணி.
12. திரு. S. கண்ணுசாமி பிள்ளை அவர்கள், 233, லிங்கி செட்டித்தெரு, ஜார்ஜ்டவுன்.
13. திரு. A. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், M. A. சொந்தக்காரர், ருக்மணி குக்கர் கம்பெனி, இராயபுரம்.
14. திரு. C. S. சுவாமிநாத முதலியார் அவர்கள், B. A. "தாரகவிலாசம்" கதீட்றல்.
15. திரு. E. N. தணிகாசல முதலியார் அவர்கள், B. A. B. L. 2/20, வேங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.
16. திரு. C. இராஜரத்தின முதலியார் அவர்கள் 18, முதல் நாராயணன் தெரு, ஜார்ஜ்டவுன்.

17. திரு. C. இரத்தின முதலியார் அவர்கள், 120, சூளை ஹைரோட், வேப்பேரி.
18. திரு. S. M. வேங்கடாஜல முதலியார் அவர்கள், 28, வீராசாமிபிள்ளை தெரு, எழும்பூர்.
19. திரு. M. C. சம்பந்த முதலியார் அவர்கள், 13, தாச்சி அருணாசல முதலி தெரு, மயிலை.
20. திரு. S. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், B.A.B.L. அருண்டேல் தெரு, மயிலை.

### கணக்காளர்

திரு. C. தியாகராய முதலியார், காரியதரிசி, வேளாள ஐக்கிய நாணய சங்கம், சென்னை.

### கணிதபரிசோதகர்

திரு. V. மாணிக்க முதலியார், நிருவாக அங்கத்தினர், கிறிஸ்டியன் மத்திய ஐக்கிய நாணய பாங்கி, சென்னை.

### பத்திராசிரியக் கழகம்

1. திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A. B. L. பத்திராசிரியர்.
2. திரு. வல்லை. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A. உதவி பத்திராசிரியர்.
3. திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், தமிழ் ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.
4. வித்துவான் திரு. பாரிபாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்கள், சென்னை.
5. திரு. S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், B. A. L. T. *Deputy Inspector of Schools*, விழுப்புரம்,
6. திரு. T. V. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், பத்திராசிரியர், "நவசக்தி" இராயப்பேட்டை.
7. பண்டிட். K. குப்புச்சாமி முதலியார் அவர்கள், திருக்குறள் விளக்க ஆசிரியர், கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி.
8. திரு P. V. மாணிக்க நாயக்கர் அவர்கள், *Retd. Supdg. Engineer*, மயிலை.
9. திரு.C. S. சுவாமிநாத முதலியார் அவர்கள், B. A. *Ag. Commissioner for Religious Endowments*, சென்னை
10. திரு. S. கண்ணுசாமி பிள்ளை அவர்கள், B. A.

## வெளியூர் நிருவாக சபை அங்கத்தினர்.

### செங்கற்பட்டு

1. திரு. M. சாமிநாத முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.
2. திரு. W. T. மாசிலாமணி முதலியார் அவர்கள், வாலாஜாபாத்.
3. திரு. புழலை. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், தமிழ்ப்புலவர், செம்பியம், பிரம்பை

### வட ஆர்க்காடு

4. திரு. இராஜவேலு முதலியார் அவர்கள், பீ. ஏ., வேலூர்.
5. திரு. இராஜா பிள்ளை அவர்கள், தமிழ்ப்புலவர், வேலூர்.
6. திரு. முனிசாமி முதலியார் அவர்கள், திருவண்ணாமலை.

### சித்தூர்

7. திரு. ஆ. தேவராஜ முதலியார் அவர்கள், பீ. ஏ. பீ. எல்., *Public Prosecutor*
8. திரு. மணி. கோடீசுவர முதலியார் அவர்கள், பீ. ஏ., எல். டி.
9. திரு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், பீ. ஏ., எல். டி.

### சேலம்

10. திரு. V. V. C. நடேச முதலியார் அவர்கள்
11. ராவ்பஹதூர் எல்லப்பச் செட்டியார் அவர்கள், M. L. C.
12. திரு. இரத்தினசபாபதிக் கவுண்டர் அவர்கள், மிட்டாதார், புதுப்பாளையம்.



### கோயமுத்தூர்

13. திவான் பஹதூர் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்.
14. திரு. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள்.
15. ராவ்பஹதூர் C. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள், M. L. C.

### நீலகிரி

16. திரு. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் பீ. ஏ., பீ. எல்.
17. திரு. இரத்தின முதலியார் அவர்கள். பீ. ஏ., பீ எல்.

### தென் ஆர்க்காடு

18. திரு- கந்தசாமி முதலியார் அவர்கள், தமிழ்ப்புலவர்.
19. திரு. இரத்தினவேற் பிள்ளை அவர்கள்.
20. திரு. ம. ரா. குமாரசாமிப் பிள்ளை அவர்கள், மணம்பூண்டி.

### தஞ்சாவூர்

21. திரு. T. V. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், கருந்திட்டைகுடி.
22. திரு- R. கந்தசாமி மூப்பனார் அவர்கள், பீ. ஏ., பீ. எல்.
23. திரு. I. குமாரசாமிப்பிள்ளை அவர்கள்.

### திரிச்சிராப்பள்ளி

24. திரு. அமிர்தம் செட்டியார் அவர்கள், பூவாளூர்.
25. திரு. M. நடேச முதலியார் அவர்கள், தமிழாசிரியர்.
26. திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள், பீ. ஏ., பீ. எல். M. L. C.

### மதுரை

27. திரு. கூடல் பிள்ளை அவர்கள்.
28. திரு. மங்கல கவுண்டர் அவர்கள்.
29. திரு. R. S. பதி அவர்கள்.

### இராமநாதபுரம்

30. திரு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள், வித்துவான், மகிபாலன்பட்டி.
31. திரு. சொக்கலிங்க ஐயா அவர்கள், வித்துவான், காரைக்குடி.
32. திரு. A. L. A. R. நாராயணச் செட்டியார் அவர்கள், தேவகோட்டை.

### திருநெல்வேலி

33. திரு. K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், எம். ஏ., எம். எல்.
34. திரு. T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் பீ. ஏ., பீ. எல். M. L. C.
35. திரு. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் பீ. ஏ., பீ. எல்., தூத்துக்குடி.

### பெங்களூர்

36. திரு. ஆறுமுக முதலியார் அவர்கள், நால்வர் பவனம்.

### புதுக்கோட்டை

37. திவான் பஹதூர். T. N. முத்தைய செட்டியார் அவர்கள், இராமச்சந்திரபுரம்.
38. திரு. P. S. சிவஞான முதலியார் அவர்கள் பீ. ஏ., பீ. எல். *Judge*, புதுக்கோட்டை.

### திருவனந்தபுரம்

39. திரு. இலக்குமணப்பிள்ளை அவர்கள் பீ. ஏ.

### புதுச்சேரி

40. திரு. கிரந்தே சிவசங்கரச் செட்டியார் அவர்கள்.
41. திரு. A. V. முத்தைய முதலியார் அவர்கள்.
42. திரு. பழனிசாமிப் பிள்ளை அவர்கள்.

# தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின்
# 45 - ஆம் ஆண்டு நிறைவு விழா

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 45-ஆம் ஆண்டு நிறைவு விழாவின் பேரவை 1928-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 29-30-ஆம் நாட்களில், சென்னை "நவசக்தி" ஆசிரியரும் செந்தமிழ்ப் பெரும் புலவருமாகிய உயர் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் அவைத் தலைமையில் கூடியது.

முதல் நாள் காலையில் தமிழ் மறைப் பாராயணத்துடன் சபையின் அங்கத்தினர்கள் திருவீதிவலம் வந்து சிவாலய மடாலய வழிபாடு செய்தார்கள்.

மாலை 3½-மணிக்குப் பேரவை தொடங்கப்பெற்றது. தமிழ்மறை யோதலும் மன்னர் வாழ்த்துப் பாடுதலும் நடைபெற்றன. வரவேற்புக் கழகத்தலைவர் திரு. M. சின்னத்தம்பித் தேவர் B. A., B. L. அவர்களால் தலைவருக்கு வரவேற்புத்தாள் படித்துக் கொடுக்கப்பெற்றது. அமைச்சர் திரு. A. S. முத்துப்பிள்ளையவர்களால் சபையின் அறிக்கை படிக்கப்பெற்றது. அவைத் தலைவரவர்களால் "தென்னாடுடைய சிவனே போற்றி - எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி" என்னும் திருவாக்கைப் பீடிகையாகக் கொண்டு மிக நுண்பொருள்களடங்கிய முன்னுரை நிகழ்த்தப்பெற்றது. சென்னைப் புலால் மறுத்தற் சங்கச் சொற்பொழிவாளர் திரு. கா. சிவசங்கர முதலியாரவர்களால் "திருஞானசம்பந்தரும் வாயுதாரணையும்" தென்காசித் திருக்குறளவதானியார் திரு. தி. ப. சுப்பிரமணிய தாஸரவர்களால் "சிற்றினஞ் சேராமை" கீழச்சிவற்பட்டி மீனாட்சி சுந்தரேசர் கலாசாலைத் தலைமையாசிரியர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்களால் "சேக்கிழார்" சைவசித்தாந்த மகாசமாஜ அமைச்சரும் சென்னை ஹைகோர்ட்டு அட்வகேட்டுமான திரு. பாலசுப்பிரமணிய முதலியார் B. A. B. L. அவர்களால் "சமயங்களின் நாட்டம்" என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் நிகழ்த்தப்பெற்று இரவு 11-மணிக்குக் கூட்டங் கலைந்தது.

இரண்டாம் நாள் காலை 9-30 மணிக்குச் சென்னை அட்வகேட் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L. அவர்களால், சபையின் நிறுவியாரான காலஞ்சென்ற உயர் திரு. தெ. ச. சு. சுப்பிரமணிய முதலியாரவர்கள் திருவுருப்படம் திறந்து வைக்கப்பெற்றது. திரு. மா. கிருஷ்ண பிள்ளையவர்கள் பெண் பாடசாலை மாணவிகளால் "மாணிக்க வாசகி" யென்னும் திவ்யசரித்திரம் நாடகரூபமாக நடித்துக் காட்டப்பெற்றது. மீண்டும் மாலை 3-30 மணிக்குப் பேரவை தொடங்கப்பெற்றது. பாளையங்கோட்டை சைவசபை அமைச்சர் திரு. A. முத்தையபிள்ளை B. A., B. L. அவர்களால் "சைவம்" சாத்தூர் தமிழ்ச்சங்க அமைச்சர் திரு. T. S. கந்தசாமி முதலியார் B. A. அவர்களால் "மங்கையர்க்கரசியார்" சென்னை அட்வகேட் திரு. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L. அவர்களால் "மனநூலும்-சைவமும்" உயர் திரு. கருணாலய சுவாமிகளால் "நல்லொழுக்கம்" கீழச்சிவற்பட்டி திரு. அ. மு. சரவண முதலியாரவர்களால் "சமயகுரவர்" மணப்பூண்டி திரு. ம. ரா. குமாரசாமிப் பிள்ளையவர்களால் "நாயன்மார்-திருக்கோவில் வழிபாடு" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. சபையின் துணைத்தலைவர் திரு. S. குமாரசாமிப் பிள்ளை B. A. அவர்களால் அவைத் தலைவரவர்கட்கும் ஏனைய சொற்பொழிவாளர்கட்கும் நன்றி கூறப்பெற்று மலர் மாலைகள் சூட்டப்பெற்று இரவு 12 மணிக்குப் பேரவை அரநாம முழக்கத்துடன் இனிது முடிவுற்றது. இரண்டு நாட்களிலும் சொற்பொழிவுகளின் இடையிடையே திருநெல்வேலி உயர் திரு. சுந்தர ஓதுவாமூர்த்திகளால் தமிழ்மறை பண்ணுடன் ஓதப்பெற்றது. இரண்டு நாட்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர்.

ந. சிவகுருநாதபிள்ளை.